செ.வெ.எண்: 287/2016 நாள்: 20.05.2016

ந.க.எண்.ஆ2/2072/2016

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.
நாள்: 20.05.2015

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பத்திரிகை செய்தி**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓய்வூதீயர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 07.06.2016 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை ஓய்வூதிய இயக்குநர் அவர்களின் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக நாஞ்சில் அரங்கில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் ஓய்வு பெற்றவர்களின் தீர்வு செய்யப்படாமல் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள ஓய்வூதியம் தொடர்பான குறைகளை பரீசீலனை செய்வதுடன் அவர்கள் கோரிக்கை மனுக்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு செய்திட தொடர்புடைய துறை அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அரசு அலுவலகங்கள், அரசு நிதி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதிய பலன்கள் தீர்வு செய்யப்படாமல் இருந்தால் அவ்விவரங்களை இரட்டை பிரதிகளில் 25.05.2016 -க்குள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். 25.05.2016 -க்கு பின்னர் வரும் கோரிக்கை மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. ஓய்வூதியதாரர் தங்கள் மனுவில் ஓய்வூதிய குடும்ப ஓய்வூதிய புத்தக எண் (PPO No) கடைசியாக பணிபுரிந்து ஓய்வூதியம் பெற்றுவரும் கருவூலம் மற்றும் வங்கியின் பெயர் ஆகிய விவரங்களுடன் கோரிக்கையைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளி மாவட்டங்களில் இறுதியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களின் கோரிக்கை மனுக்கள் மற்றும் அரசு சார்பற்ற துறைகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களின் கோரிக்கை மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம், (இ) நாகர்கோவில்.

செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகர்கோவில்.

} தினசரி நாளிதழ்கள் மற்றும் அகில இந்திய வானொலியில் செய்தி வெளியிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.